**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மானாமதுரை**
***ஒ.எஸ்.2/2021***
**2024-ம் ஆண்டு நவம்பர் மாதம் 19-ம் நாள் செவ்வாய்கிழமை**

**வாதி-பிரதிவாதிகளின் சாட்சியின் வாக்குமூலம். 1869ம் ஆண்டு சட்ட எண். 44வது பிரிவு 6(1)ன்படி கிரேடு III பெஞ்ச் கிளார்க் திரு.எஸ்.செல்லபாண்டியன் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **: செபஸ்தியம்மாள்** | **சாதி** | **:** |
| **த-பெ** | **:** | **சமயம்** | **:** |
| **கிராமம்** | **:** | **தொழில்** | **:** |
| **வட்டம்** | **:** | **வயது** | **:** |

**வா.சா.1 செபஸ்தியம்மாள் ஆஜர்**

**3, 4. 6, 7 பிரதிவாதிகள் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

என்னுடன் 2ம் பிரதிவாதி ஜெபமாலை சமூக நீதிமன்றத்தில் வந்துள்ளார் என்றால் சரிதான். நான் 2ம் பிரதிவாதி ஜெபமாலை நன்றாக பேசிக்கொள்வேன். 2ம் பிரதிவாதி ஜெபமாலை அவரது உடன்பிறந்த சகோதரிகளுடன் நன்றாக பேசுவேன். அந்தோணிசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து உரிமையில்லாத 2ம் பிரதிவாதி ஜெபமாலை தனது மகன் டொமிக்ராஜ் என்பவருக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுக்க உரிமையில்லை என்ற அடிப்படையில் 21.09.2020ம் தேதி செட்டில்மெண்ட் ஆவணம் ரத்து செய்யப்பட வேண்டியது எனில் சரிதான்.

2ம் பிரதிவாதி ஜெபமாலை அவரது மகன் டோமிக்ராஜ் ஏன் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களின் மீதான பாக அனுபவத்தின் அடிப்படையில் தாவா சொத்துக்களில் தங்களுக்குரிய பாகத்தினை 5. 6, 7 பிரதிவாதிகளுக்கு சேர்ந்து மேற்படி 3, 4 பிரதிவாதிகளுக்கு 18.11.2020ம் தேதி பாக பாத்திய விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் எனில் அது பற்றி எனக்கு தெரியாது.

18.11.2020ம் தேதி பாக பாத்திய விடுதலை பத்திர ஆவணம் சட்டப்படி ஏற்பட்ட ஆவணம் அதனை ரத்து செய்ய வேண்டிய அவசியமில்லையெனில் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களை நீங்கள் பொதுவாக அனுபவம் செய்து வருவது தவறு என்றால் சரியல்ல. தாவா 1 முதல் 3 இலக்க சொத்துக்கள் அதில் கருவேல மரங்களை விற்று அதில் வரும் வருமானத்தை நீங்களும், பிரதிவாதிகளும் பிரித்து கொள்வீர்கள் எனக் கூறுவது தவறு என்றால் சரிதான். 2013ல் தாவா சொத்துக்களில் உங்களுக்குரிய பங்குகளை பிரித்து தரும்படி அந்தோணிசாமியிடம் நீங்கள் கேட்டீர்களா என்றால் நான் கேட்கவில்லை.

தாவா சொத்துக்களில் உங்களுக்கோ, பிரதிவாதிகளுக்கோ எவ்வித பாத்தியமும் கிடையாது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை தவிர வேறு பல இலக்க சொத்துக்களும் சாமிநாதன் பெயரில் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்துக்களை தவிர வேறு நிறைய சொத்துக்கள் உங்கள் சாமிநாதன் பெயரில் உள்ளது என்றாலும், பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. வேறு சொத்துக்கள் சாமிநாதன் பெயரில் உள்ளதால் அதை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. தாவா வழக்கு பகுதி பாகப்பிரிவினை கோட்பாட்டின் தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல. தாவா வழக்கில் அவசியமான தரப்பினர்களை சேர்க்காத தோஷத்தால் தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

தாவா வழக்கில் நீங்கள் கோரியுள்ள பரிகாரம் காலவரையறை சட்டத்தால் பாதிக்கக் கூடியது என்றால் சரியல்ல. தாவா 1 முதல் 3 லக்க சொத்துக்களில் யுடிஆர், அடங்கல் பதிவேட்டில் பட்டா எண்.19ல் அந்தோணிசாமி பெயரில் தாக்கலாகியுள்ளது தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா 3வது இலக்க சொத்து பட்டா எண்.1491 5, 6, 7 பிரதிவாதிகள் பெயரில் பட்டா தாக்கலாகியுள்ளது என்றால் எனக்கு தெரியாது. தாவா 4வது லக்க சொத்து பழைய நத்தம் சர்வே எண்.156 புதிய நத்தம் சர்வே எண்.392/5 அந்தோணிசாமி பெயரில் பட்டா தாக்கலாகியுள்ள விவரம் எனக்கு தெரியாது. தற்போது 4வது லக்க சொத்து பட்டா எண்.196 அகஸ்டின் மனைவி ஜெஸ்டின் ஆரோக்கியசெல்வி பெயரில் பட்டா தாக்கலாகியுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

**10 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

தாவா சொத்து யுடிஆர் காலத்தில் உங்களுடைய சகோதரர் அந்தோணிசாமி பெயரில் வருவாய்த்துறை ஆவணங்கள் அடிப்படையில் ஆவண பதிவு மேற்கொள்ளப்பட்டது என்றால் சரியல்ல.

Taken down by me in open court
readover/interpreted to the witness
in Tamil and acknowledged by
him/her to be correct.

District Munsif,
Manamadurai.